10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 239 வியாழக்கிழமை ஜனவரி 18 2018 ethirolimedia@gmail.com 021224 58

## பிரியாவிடை

### துணைத் தூதர் நடராஜனுக்கு

யாழ்ப்பாணம், ஜன. 18

யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜனின் பிரியாவிடை நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

யாழ். நகரின் பிரபல விடுதியில் கலாநிதி சிதம்பரமோகன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு ஆளுநர் றெஜினோல்ட் கூரே கலந்து கொண்டார்.

06▶

## "ஜனாதிபதியை விமர்சிக்காதீர்கள்"

கொழும்பு, ஜன. 18

"ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறித்து யாரும் விமர்சிக்கவோ, சர்ச்சைக்குரிய அறிக்கைகளை வெளியிடவோ கூடாது" எனத் தனது கட்சியினருக்குக் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்துள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செயற்குழுக் கூட்டத்திலேயே பிரதமர்

06▶



## காங்கேசன் கடலில் 7 கிலோ தங்கம் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜன. 18

இந்தியாவுக்கு கடத்த முயன்ற 7 கிலோ தங்கத்தை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர். அத்துடன் இருவரைக் கைது செய்துள்ளனர்.

கடற்படைக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் காங்கேசன் துறைக் கடற்பரப்பில் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட இந்தத் தேடுதலின்போது மீன்பிடிப் படகின் நங்கூரத்துடன் கட்டிக் கடலில் போட்டிருந்த தங்கத்தைக் கடற்படையினர் கைப்பற்

06▶

### எமது அரசியலை முடக்க

## வல்லரசுகளும் சதி



யாழ்ப்பாணம், ஜனவரி 18

"எமது அரசியலை முடக்க இலங்கை அரசாங்கம் மட்டுமல்ல வல்லரசுகள் கூட பல சதிகளை கடந்த காலங்களில் செய்துள்ளன."

– எனக் குற்றஞ்சாட்டியிருக்கிறார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

தமிழ்த் தேசியப் பேரவையாகப் போட்டியிடும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று வெளியிடப்பட்டது. நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நடந்த இந்த நிகழ்வுக்குத் தலைமை

06▶

### நியாயமான அந்தஸ்து இல்லையேல்

## ஆட்சிக்கு முடிவு கட்டுவோம்!



திருகோணமலை, ஜனவரி 18

ஒருமித்த நாட்டுக்குள் நியாயமான அந்தஸ்தைப் பெறவே முயற்சிக்கிறோம். அது கிடைக்காவிட்டால் ஆட்சியை நிறுத்துவோம் என உறுதிபடத் தெரிவித்திருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன்.

பெப்ரவரியில் நடக்கவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் திருகோணமலையில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து நேற்று பிரசாரக்கூட்டம் இடம்பெற்றது.

இதில் பேசிய அவர், நாடு சுதந்திரம் பெற்ற காலம் முதல் திருகோ

06▶

## ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் நாடாளுமன்றுக்கு

### சபாநாயகர் கரு ஜயசூரிய அறிவிப்பு

கொழும்பு, ஜன. 18

பிணைமுறி மோசடி, ஊழல் மோசடிகளை விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் வரும் 23ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

நாடாளுமன்றக் கட்டடத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் சபாநாயகர் கரு ஜயசூரிய

06▶

## புலிகளின் பாதையிலேயே கூட்டமைப்பின் வியூகம்

### செல்வம் எம்.பி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.18

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தென்னிலங்கை அரசுடன் சோரம் போகவில்லை. விடுதலைப் புலிகளைப் போன்று இராஜதந்திரத்தையே கூட்டமைப்பும் கடைப்பிடிக்கிறது" என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்

06▶



தமிழர் திருநாளான தைப்பொங்கல் பண்டிகையை கனடா பிரதமர் ஜஸ்ரின் ட்ரூட் நம் தமிழ் பாரம்பரியத் தின்படி கொண்டாடுகிறார்... இந்த ஒளிப்படத்தை தனது சமூகவலைதளத்தில் "இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்" என ஆங்கில எழுத்துக்களில் பதிவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## முன்னாள் போராளிகளுக்கு ரூ. 10 ஆயிரம் கொடுப்பனவு

### பதிவு செய்யுமாறு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 18

தனியார் துறையில் பணியாற்றும் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளுக்கு 10 ஆயிரம் ரூபா உதவித் தொகை வழங்கப்படவுள்ளது. இதற்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட புனர்வாழ்வுக் கிளைக்குப் பொறுப்பான அதிகாரி அறிவித்துள்ளார்.

"மறுவாழ்வு வழங்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்ட முன்னாள் போராளிகளில் தனியார் நிறுவனங்களில் பணியாற்றுவோருக்கு 10 ஆயிரம் ரூபா உதவித்தொகை வழங்க வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டது.

அந்த உதவித் தொகையை யாழ். மாவட்டத்தில் வழங்கும்

06▶



உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES
Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்

# தமிழ்த் தேசியப் பேரவையின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீடு









யாழ்ப்பாணம், ஜன.18

தமிழ்த் தேசிய பேரவையின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்றுப் புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் வெளியிட்டுவைக்கப்பட்டது. தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு உரைகளையடுத்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் தேசிய அமைப்பாளரும் யாழ்.மாநகர சபை முதன்மை வேட்பாளருமான சட்டத்தரணி மணிவண்ணன் ஆகியோர் தமிழ்த் தேசியப் பேரவையின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுவைக்க, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஆனந்தராஜா அதனைப் பெற்றுக் கொண்டார். (அ)

## தபால் வாக்களிப்புக்கு 3 ஆயிரத்து 226 பேர் வவுனியாவில் தகுதி

வவுனியா, ஜன.18

வவுனியா மாவட்டத்தில் தபால் மூலம் வாக்களிக்க மூவாயிரத்து 226 பேர் தகுதி பெற்றுள்ளதாக மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் டி.சி.அரவிந்தராஜ் தெரிவித்துள்ளார்.

"வவுனியா மாவட்டத்தில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு மூவாயிரத்து 471 அரச சேவையாளர்கள் விண்ணப்பித்திருந்தனர். இதில் உரிய முறையில் விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்யாமை, திணைக்களத் தலைவரின் கையொப்பம் பெறாமை உள்ளிட்ட சில காரணங்களால் 245 பேரின் தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. இந்த நிலையில் மூவாயிரத்து 226 பேர் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்" எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, எதிர்வரும் 22, 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் தபால் மூல வாக்களிப்பு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மிருசுவிலில் கஞ்சா

யாழ்ப்பாணம், ஜன.18

மிருசுவில் புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் உள்ள காணி ஒன்றில் இருந்து 6 கிலோ கிராம் கஞ்சா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியளவில் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் கஞ்சா விற்பனை நடைபெறுவதாக கொடிகாமம் பொலிஸாருக்குக் தகவல் கிடைத்ததை தொடர்ந்து, பொலிஸார் சென்ற போது சந்தேக நபர்கள் கஞ்சாவினை கைவிட்டுத் தப்பி ஓடியுள்ளனர். எனினும் அவர்கள் வைத்திருந்த கஞ்சா பொலிஸாரிடம் சிக்கியது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகளைக் கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாணவர் அனுமதியில் அரசியல் இடையூறுகள்

யாழ்ப்பாணம், ஜன.18

பாடசாலையில் மாணவர்களை இணைத்துக்கொள்ளுமாறு அதிபர்களை வற்புறுத்தி கடிதங்கள் மூலமும், தொலைபேசி வாயிலாகவும் சில அரசியல்வாதிகள் அழுத்தங்களைப் பிரயோகிப்பதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும், எனவே அதற்கு இடம் கொடாமல் மாணவர் அனுமதியில் இறுக்கமான நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் கே.நல்லதம்பி , வடக்கு மாகாணக் கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

"வடக்கு மாகாணத்தில் உள்ள பிரபல பாடசாலைகளுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளும் உரிய நடைமுறைகளைப் புறந்தள்ளி பிராதான அரசியல் கட்சியின் உயர்மட்ட தலைவர்கள் சிலர் தமக்கு வேண்டியவர்களின் பிள்ளைகளுக்கு அனுமதி வழங்குமாறு கடிதம் மூலமும், தொலைபேசி வாயிலாகவும் அதிபர்களுக்கு அழுத்தங்கள் வழங்குவதாக எமக்கு முறைப்பாடுகள் வந்தவண்ணம் உள்ளன.

வடமராட்சி கல்வி வலயத்தில் உள்ள ஒரு பாடசாலைக்கு மாணவர்களை அனுமதிக்குமாறு கடிதமூலம் கோரியிருப்பதாகவும், அங்கு பலத்த நெருக்கடி நிலை உருவாகியிருப்பதாகவும் கூறப்பட்டுகின்றது.

உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் தங்களின் கட்சி சார்ந்த அல்லது தங்களின் கட்சிக்காக ஆட்களை திரட்டும் நோக்கோடு இத்தகைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றமை முறைகேடா? குற்றமா? என்ற கேள்விகளையும் சமூகத்தில் உள்ளவர்கள் கேட்டு நிற்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு அரசியல் தலையீடுகளுக்கு இடம் கொடுக்காமல் நடந்து கொள்வது பாராட்டப்பட வேண்டியது. அத்தகைய நடைமுறையை மிகவும் இறுக்கமாகக் கடைப்பிடியுங்கள்" என அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மின்கம்பம் வீழ்ந்தது



வவுனியா, ஜன.18

வவுனியாவில் கடந்த ஆண்டு திறந்து வைக்கப்பட்ட புதிய பஸ் நிலையத்தில் இருந்த மின்கம்பம் ஒன்று நேற்று திடீரென சரிந்து விழுந்துள்ளது.

எனினும் இதன்போது ஒருவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. 195 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய பஸ் நிலையத்தினை திறந்துவைத்து, ஒரு வருடம் மட்டுமே பூர்த்தியடைந்த நிலையில் அங்குள்ள மின்கம்பம் சரிந்து விழுந்தமை , குறித்த பஸ் நிலைய நிர்மாணிப்புத் தரம் குறித்த சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது. (அ)

# கிளிநொச்சி ம.வி.யில் மாணவர் கௌரவிப்பு









கிளிநொச்சி,ஜன.18

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் கடந்த 2017 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தோற்றி பல்கலைகழகத்துக்குத் தெரிவான மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு குறித்த பாடசாலையில் நேற்று இடம்பெற்றது.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் க.பொ.த. உயர்தர பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் 53 மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவாகியுள்ளதோடு, நான்கு மாணவர்கள் விசேட( மெறீட்) சித்தியுமடைந்துள்ளனர். பாடசாலை அதிபர் ஜெயந்தி தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்ற கௌரவிப்பு நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே, வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமார், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களை கௌரவித்தனர்.(அ)

எதிரொலி
Ethiroli
வியாழன். 18 ஜனவரி 2018 ethirolimedia@gmail.com

## அவரையும் விட்டுவைக்கவில்லையா?

பொங்கலுக்குப் பின்னர் தேர்தல் பிரசாரங்கள் சூடு பிடிக்கத் தொடங்கிவிட்டன. ஆரம்பத்தில் அடக்கி வாசித்த கட்சிகளும், வேட்பாளர்களும் இப்போது களத்தில் இறங்கி அடித்தாடத் தொடங்கிவிட்டனர். வேட்பாளர் அறிமுகங்களும், விஞ்ஞாபன வெளியீடுகளும் ஒப்பேறி முடிந்த கையோடு, தனித்தனியாக ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று வாக்குக் கேட்கும் அடுத்த கட்ட நடவடிக்கை தொடங்கிவிட்டது. வாக்காளர்களை விடவும் வேட்பாளர்களே அதிகமாக இருக்கிறார்களோ என நினைக்குமளவுக்கு, ஊரெங்கும் திருவிழா போல தங்கள் அல்லக்கை, நொள்ளக்கைகளோடு வேட்பாளர்களின் பவனியால் வீதிகள் நிறையத் தொடங்கிவிட்டன.

அப்போதுதான் "அட இவனெல்லாம் / இவளெல்லாம் வேட்பாளரா? " என்று மக்கள் மூக்கின் மேல் விரலை வைத்து ஆச்சரியப்பட்டுவிட்டு, வீடு தேடி வருவோருக்கெல்லாம் "கட்டாயம் உங்களுக்குத்தான் போடுவம்" என்று கூறி புன்னகையோடு வழியனுப்புகிறார்கள். ஆனால் இப்படித்தான் முன்னைய காலங்களிலும் "உங்களைவிட்டால் ஆருக்குப் போடப் போறம்?" என்று அதிகாரத்தில் இருந்தவர்களைப் பார்த்துப் பல்லிளித்து, தருவதையெல்லாம் உருவிவிட்டு, கடைசியில் தங்கள் கொள்கையோடு ஒத்துப் போன கட்சிக்கு வாக்களித்தவர்கள், இந்த முறை யாருக்கு ஆப்பு வைக்கப்போகிறார்களோ என்ற பயத்தோடு தான் எல்லா வேட்பாளர்களும் ஊர்கோலம் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

இப்படி ஊர்கோலம் போய்க்கொண்டிருக்கும் வேட்பாளர்கள் தங்களை வாக்காளர்கள் மறக்காமல் இருக்க, துண்டுப்பிரசுரங்களையும், பொக்கெற் கலண்டர் வடிவிலான அறிமுக அட்டைகளையும் சந்தடி சாக்கில் ஒவ்வொரு வீட்டிலும் திணித்துவிட்டு வந்துவிடுகின்றனர். அப்படி வழங்குகின்ற அட்டைகளில் , "அமெரிக்காவை அலாக்காகத் தூக்கி முனியப்பர் கோயிலடியில் வைப்போம்", "இந்து சமுத்திரத்தை நன்னீராக்கி இரணைமடுவை நிரப்புவோம்" என்பன போன்ற வானமேறி வைகுண்டம் போகக் கூடிய வாக்குறுதிகள் இருக்கும். கூடவே, மக்களுக்கு நன்கு அறிமுகமான தந்தை செல்வா, அமிர்தலிங்கம், ஜீ.ஜீ. பொன்னம்பலம், சம்பந்தன், கஜேந்திரகுமார், டக்ளஸ் தேவானந்தா, மைத்திரி, மகிந்த என்பன போன்ற அரசியல்வாதிகளுடைய புகைப்படங்களோடு தங்கள் படத்தையும் இணைத்து, "அவரின் அரசியல் வாரிசு நானே" என மறைமுகமாக உணர்த்தி, அந்தப் பிரபலமான அரசியல்வாதியின் அபிமானிகளின் வாக்குகளைப் பெறவும் முயல்கிறார்கள்.

அப்படியான ஒரு வேட்பாளரின் வர்ண அட்டையொன்றைப் பார்த்தபோது தூக்கிவாரிப் போட்டது. உதயசூரியன் சின்னத்தில் கிளிநொச்சியில் போட்டியிடும் அந்த வேட்பாளர் , தன் படத்துக்கு அருகில் விடுதலைப்புலிகளின் முக்கிய பிரமுகரும், ஈரோஸ் அமைப்பின் தலைவருமான வே.பாலகுமாரனின் படத்தைப் போட்டு வாக்குக் கேட்டிருந்தார். நல்ல வேளையாக பாலகுமாரன் அதைக் காணவில்லை. கண்டிருந்தால் அவ்வளவுதான். எங்காவது சுவரில் தலையை மோதி உடைத்திருப்பார்.

மிகச் சிறந்த போராளியாகவும், எதையும் நன்கு சிந்தித்து முடிவெடுப்பவராகவும், உலக அரசியல் நகர்வுகளைத் துல்லியமாக எடைபோடக்கூடியவராகவும் இருந்தவர் வே.பாலகுமாரன். விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்த பின்னர் அவரை, முதன்மையான ஒருவராகப் புலிகள் மதித்தனர். அந்த மதிப்பை வைத்து சுகபோகமாக வாழாமல், சாதாரண போராளியாகவே வாழ்ந்தவர் பாலகுமாரன். மக்கள் விடுதலை என்ற விடயத்துக்காக, தன்னுடைய தலைமை போனாலும் பரவாயில்லை என்று ஈரோஸை விடுதலைப்புலிகளோடு இணைத்தவர் அவர். அப்படிப்பட்டவரை, எதற்கும் ஆசைப்படாதவரை, மெய்யான ஜனநாயகப் போராளியாகக் கடைசிவரை வாழ்ந்தவரை, இப்படி வாக்குப் பிச்சை கேட்கும் அட்டையில் பிரசுரித்து, அவரையும் தேர்தல் பொருளாக்கி அசிங்கப்படுத்தி விட்டீர்களே. தமிழன் உருப்பட்ட மாதிரித்தான்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# தேர்தல் அதிகாரிகளும் எமக்கு எதிராகக் களத்தில்!

## தமிழ்த் தேசியப் பேரவை குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன.18

"தமிழ்த் தேசியப் பேரவையைத் தோற்கடிப்பதற்காக அரச இயந்திரம் முழுமையாக களமிறக்கப்பட்டுள்ளது.

தேர்தல் திணைக்கள அதிகாரிகள் கூட எமக்கு எதிராகச் செயற்பட்டுவருகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குச் சார்பாக பல்வேறு கட்டுரைகளை எழுதிய ஒருவரை தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரி ஆக்கியிருக்கின்றார்கள்.

இலங்கை தேர்தல்கள் ஆணைக் குழுவில் அதிகாரியான ரட்ணஜீவன் எச். ஹூலுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருக்கின்ற பணி, எம்மை நீதிமன்றங்களில் நிறுத்துவதே" எனக் குற்றஞ்சாட்டியுள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அமைப்பாளரும் தமிழ்த் தேசியப் பேரவையின் யாழ் மாநகர முதல்வர் வேட்பாளருமான சட்டத்தரணி வி.மணிவண்ணன்.

தமிழ்த் தேசியப் பேரவையின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"2015 ஆம் ஆண்டும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தேர்தல் விதிமுறைகளை மீறியதாக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. இன்றும் அந்த வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நாங்கள் அந்த வழக்கில் போராடிக் கொண்டிருக்கின்றோம். எமக்கு எதிராகப் பொய்யான வழக்குகள் சோடிக்கப்படுகின்றன. இன்று நாங்கள் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலிலே தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டதாக மல்லாகம் நீதிமன்றில் எம்மைக் கொண்டுசென்று விட்டுள்ளார்கள்.

இவர்கள் எத்தனை பேரைக்கொண்டு எமது கட்சியின் செயற்பாடுகளை முடக்க நினைத்தாலும் நாங்கள் முடங்கிவிடமாட்டோம் என்பதை அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றோம். அரசு தன்னுடைய கரங்களைப் பலப்படுத்தி எங்களுடைய கட்சியைக் குறிவைத்துத் தாக்கிக் கொண்டிருக்கின்றது. யாரோ ஒரு தரப்பு தோற்றுப்போய்விடக்கூடாது என்பதற்காகவே இந்த அரச இயந்திரம் எமக்கு எதிராகப் பயன்படுத்தப்படுகின்றது. அப்படியானால் இதுவரைகாலமும் வென்றுகொண்டிருந்த ஒரு தரப்பு அரசுக்குத் தேவையான ஒரு தரப்பாக இருக்கின்றது. அரசைக் காப்பாற்றுகின்ற ஒரு தரப்பாக இருக்கின்றது. அரசைக் காப்பாற்றுகின்ற ஒரு தரப்புக்கு நெருக்கடி ஏற்பட்டிருப்பதால்தான் நேற்று முன்தினம் நடைபெறவிருந்த முதலமைச்சர் தலைமையிலான கூட்டத்துக்குக் கூட தடைவிதிக்கப்பட்டது.

தேர்தல்கள் ஆணைக்குவில் அங்கம் வகிக்கின்ற ரட்ணஜீவன் ஹூல் என்பவர் இதுவரை முறைப்பாடு செய்த ஒரே கட்சி என்றால் அது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மட்டுமே. எமக்கு எதிரான மூன்று முறைப்பாடுகளை பத்திரிகையாளர் மாநாடு வைத்துத் தெரிவித்திருக்கின்றார்.

அவருக்கு இந்தத் தருணத்தில் நாங்கள் ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகின்றோம். எங்கள் மீது நீங்கள் 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி 10 ஆம் திகதிவரை தாக்குதலை நடத்துங்கள். 11 ஆம் திகதி உங்கள் மீது தாக்குதல் தொடங்கப்படும். அதை எதிர்கொள்ள நீங்கள் தயாராக இருங்கள். தயவாகவும் பொறுப்புடனும் இதனைக் கூறிக்கொள்கின்றோம். எங்களை வம்புக்கு இழுத்தால் நாங்களும் சும்மா விடப்போவதில்லை" என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# வீதி ஓவியர்களுக்கு ஜனாதிபதி விருது

கொழும்பு,ஜன.18

சிறந்த படைப்பாற்றல் மிக்க வீதி ஓவியக் கலைஞர்களின் திறமையைப் பாராட்டும் வகையில் இந்த வருடம் முதல் இத்துறைச்சார்ந்த கலைஞர்களுக்காக ஜனாதிபதி விருது வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

கொழும்பு வீதி ஓவியக் கலைஞர்கள் சங்கத்துடன் நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதேபோல், வீதி ஓவியக் கலைஞர்களின் நலனுக்காகவும் அவர்களின் எதிர்கால நடவடிக்கைகளுக்காகவும் அனைத்து ஆதரவுகளையும் வழங்குவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தேசிய நல்லிணக்கச் செயற்பாட்டுடன் ஒன்றிணைந்து வடக்குக் கிழக்கை இணைக்கும் நல்லிணக்க வேலைத்திட்டத்துக்கு தமது படைப்பாற்றலை வெளிப்படுத்தும் வல்லமை குறித்துச் சுட்டிக்காட்டிய குறித்த ஓவியக் கலைஞர்கள் சில கோரிக்கைகளையும் ஜனாதிபதியிடம் முன்வைத்தனர்.

சுற்றுலா கவர்ச்சிமிக்க பிரதேசங்களில் தமது படைப்புக்களை காட்சிப்படுத்துவதற்கு சந்தர்ப்பத்தை பெற்றுக் கொள்ளல், இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் பதிவு செய்தல், இலங்கை கலைச்சபையை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொள்ளல், கலாசார மற்றும் சுற்றுலா அமைச்சுக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளல், நகர அலங்கார செயற்பாடுகளில் ஈடுபடுதல் முதலான கோரிக்கைகளை முன்வைத்தன்ர்.

அதேபோல், நீண்டகாலம் இந்தத் துறையில் ஈடுபடுவோருக்கு கடன் வசதியை செய்து தருமாறும் இவர்கள் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டனர். அவை குறித்துச் சாதகமாகப் பரிசீலிக்கப்படுமென மைத்திரிபால சிறிசேன உறுதியளித்தார். (அ)

## ரவியின் பாதுகாப்பு வாபஸ்

கொழும்பு,ஜன.18

முன்னாள் அமைச்சர் விஜேதாச ராஜபக்சவுக்கு வழங்கப்பட்டிருந்த அமைச்சரவைப் பாதுகாப்புப் பிரிவின் பாதுகாப்பு திரும்ப பெறப்பட்டதைப் போன்று, ரவி கருணாநாயக்கவின் பாதுகாப்பும் விலக்கப்பட்டுள்ளது.

அமைச்சராக பதவி வகித்து தற்போது சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்து வரும் ரவி கருணாநாயக்கவுக்கு 9 அதிகாரிகள் பாதுகாப்பை எப்படி வழங்க முடியும் என, ராஜபக்ச, அமைச்சரவை பாதுகாப்பு பிரிவில் முறைப்பாடு செய்திருந்தார். அந்த முறைப்பாட்டை கவனத்தில் கொண்டே 9 அதிகாரிகளில் 7 பேரைத் திரும்ப பெற்றுள்ளது. (அ)

# பொலிஸாரின் பெருந்தன்மை



யாழ்ப்பாணம், ஜன.18

மாணவன் ஒருவரால் யாழ்.நகரில் தவறவிடப்பட்ட பணப்பையை (பேர்ஸ்) கண்டெடுத்த யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் அதனை உரியவரிடம் ஒப்படைத்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் இடம் பெற்றது.

கொக்குவிலைச் சேர்ந்த குறித்த மாணவன் யாழ். நகருக்கு வந்து திரும்பிய போது தனது பணப்பையைத் தவறவிட்டுள்ளார். அந்தப் பணப்பை யாழ். இந்து ஆரம்பப் பாடசாலைக்கு முனபாக வீதியில் கிடந்துள்ளது.

அதனை யாழ். பொலிஸ் நிலைய போக்குவரத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் கண்டெடுத்துள்ளார். அவர் அந்தப் பணப்பையில் குறிப்பிடப்பட்டிருந்த கைபேசி இலக்கத்துக்கு தொடர்புகொண்டு மாணவனின் குடும்பத்தை யாழ்ப்பாணத்துக்கு வரவழைத்துள்ளார். மாணவனால் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் அந்தப் பணப்பை உரியவாறு மீள வழங்கப்பட்டது.

பணப்பைக்குள் மாணவனின் ஆவணங்கள், வங்கி அட்டைகள் மற்றும் 7 ஆயிரம் ரூபா பணம் என்பன இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (அ)

## இன்று நாளும் கோளும்

18.01.2018 வியாழக்கிழமை ஏவிளம்பி வருடம் தை மாதம் 05 ஆம் நாள்

பிரதமை மு.ப. 10.28 மணி வரை திருவோணம் 01.11 வரை சித்தயோகம்

இராகுகாலம் 01.30 - 03.00 சுபநேரம் மு.ப. 10.30 - 11.30 எமகண்டம் மு.ப. 06.00 - 07.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| செலவு | பெருமை | ஒய்வு | சினம் | புகழ் | ஆர்வம் | வெற்றி | இலாபம் | தொல்லை | சிரமம் | அச்சம் | அசதி |

# தடையை விலக்குக!

## மன்னார் மீனவர்கள் மனு



மன்னார், ஜன.18

மன்னார் மாவட்டத்தில் ஈச்சளவக்கை பகுதியிலுள்ள தமிழ் மீனவர்கள், பெரியமடு கிராமத்தில் அமைந்துள்ள குளத்தில் நன்னீர் மீன்பிடிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் பல தமிழ் குடும்பங்கள் தங்கள் வாழ்வாதாரத்தில் பெரும் இடர்பாட்டை எதிர்நோக்கியுள்ளனர். எனவே குறித்த மீனவர்களுக்குச் சாதகமாக நடவடிக்கை எடுக்குமாறு கோரி மாந்தை மேற்கு பிரதேச செயலரிடம் மீனவர்கள் மனு ஒன்றை நேற்றுப் புதன்கிழமை கையளித்துள்ளனர்.

இது குறித்து பாதிப்படைந்துள்ள மீனவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,


"நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக 1978ம், 1979ம் ஆண்டு காலப் பகுதியில் ஈச்சளவக்கை கிராமத்தை சேர்ந்த 46 குடும்பங்கள் இடம்பெயர்ந்ததால், பெரியமடு கிராமத்தில் தெளிவாறு என்னும் பகுதிக்குள் குடியமர்த்தப்பட்டார்கள்.

அந்நேரம் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர், எங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் பெரியமடுவில் அமைந்துள்ள குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுவதற்கான அனுமதியை தந்திருந்திருந்தார்.

அத்துடன் இந்தப் பகுதிக் குளத்தில் இரு சமூகத்தினரைச் சார்ந்த நன்னீர மீன்பிடி மீனவர்கள் 1984 ஆம் ஆண்டு ஒரு சங்கமாக இயங்கி மீன் பிடியில் ஈடுபட்ட சரித்திரமும் உண்டு.

ஆனால் தற்பொழுது தமிழ் மீனவர்களாகிய எங்களை இந்தப் பகுதியில் வாழும் மற்றைய சமூகத்தைச் சார்ந்த மீனவர்கள் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடத் தடை விதித்து வருகின்றனர். இதனால் நன்னீர் மீன்பிடியை நம்பியே வாழும் எங்கள் குடும்பம் வாழ்வாதாரத்தில் மிகவும் வறுமைக் கோட்டுக்குள் சிக்கி தவிக்கின்றோம். எனவே இந்த விடயத்துக்கு சமூகத் தீர்வொன்றைத் தருமாறே பிரதேச செயலரிடம் மனுக் கொடுத்துள்ளோம்" என்றார். (அ)


## அந்தநாள் ஞாபகம்



18.01.1952

தமிழக சந்தனக் கடத்தல்காரர் வீரப்பன் பிறந்த நாள்

# படையினர் நடத்திய மருத்துவ முகாம்





யாழ்ப்பாணம், ஜன.18

யாழ். பாதுகாப்புப் படைப்பிரிவின் ஏற்பாட்டில் கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவர்களின், பொதுமக்களுக்கான மருத்துவ முகாம் ஒன்று சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இதில் சுமார் 300 பொதுமக்கள் கலந்து பயன் பெற்றனர். (அ)

# ஆமை இறைச்சியோடு அகப்பட்டார் ஒருவர்




முல்லைத்தீவு,ஜன.18

முல்லைத்தீவு , குமாரபுரம் பகுதியில் கசிப்பு மற்றும் ஆமை இறைச்சியுடன் பொலிஸார் ஒருவரை கைது செய்துள்ளனர்.

முள்ளியவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு நேற்றுக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் குமாரபுரம் பகுதியில் பாழடைந்த வீடொன்றில் 8 லீற்றர் கசிப்பு மற்றும் ஆமை இறைச்சியுடன் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்த சந்தேக நபரிடம் விசாரணைகளை மேற்கொள்ளும் பொலிஸார் இவரை நீதிமன்றில் இன்று முற்படுத்தவுள்ளனர்.

அத்தோடு இதுபோன்ற இரகசியத் தகவல்களை வழங்கும் பொதுமக்களுக்கு நன்றி தெரிவித்த முள்ளியவளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, இவ்வாறு குற்றச் சம்பவங்கள் தொடர்பில் மக்கள் முறையிடும் போது விரைந்து நடவடிக்கை எடுக்கமுடியும் எனவும் தெரிவித்தார். (அ)

# கட்சிசார் செயற்பாட்டில் வர்த்தக சங்கத் தலைவர்


வவுனியா, ஜன.18


வவுனியா வர்த்தக சங்கத்தலைவர் குறித்த கட்சி ஒன்றின் சார்பாகச் செயற்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

வவுனியா வர்த்தக சங்கத் தலைவராக இருந்த ரி.கே.இராஜலிங்கம், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதால் தனது பதவியில் இருந்து விலகியிருந்தார். இதனையடுத்து உபதலைவராக இருந்தவரின் சகோதரர் நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பதால் தேர்தல் நேரம் என்பதால் அவர் தலைமைப் பதவியை ஏற்கவில்லை.

இந்த நிலையில் தற்காலிகத் தலைவராக எஸ்.கிரிதரன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட குறித்த கட்சி ஒன்றிடம் விண்ணப்பித்து இருந்தபோது, அந்தக் கட்சியில், இவரது வட்டாரத்தில் இவரது உறவினர் ஒருவர் போட்டியிடுவதால் தான் போட்டியிடாது விலகிக் கொண்டிருந்தார். தற்போது வர்த்தக சங்கத் தலைவர் பதவியைப் பெற்றுள்ளார். இந்த நிலையில் அவர் குறித்த கட்சிக்கு சார்பாக செயற்படுவதுடன் அவர்களது பிரசார கூட்டங்கள் சிலவற்றிலும் கலந்து கொண்டுள்ளார் என வர்த்தகர்கள் சிலர் விசனம் தெரிவித்துள்ளனர். (அ)

# எம்.ஜி.ஆர். பிறந்தநாள் கல்வியங்காட்டில்







யாழ்ப்பாணம், ஜன.18

பிரபல தமிழ் நடிகரும், தமிழக முன்னாள் முதலமைச்சருமான எம்.ஜி. இராமச்சந்திரனின் (எம்.ஜி.ஆர்) 101 ஆவது பிறந்ததின நிகழ்வு யாழ்.கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர். சிலைக்கு முன்பாக நேற்று நடைபெற்றது.

எம்.ஜி.ஆர். சிலைக்கு எம்.ஜி.இராமசந்திரனின் நண்பனும் தீவிர ரசிகனுமான யாழ் எம்.ஜி.ஆர். கோப்பாய் சுந்தரலிங்கம் மற்றும் யாழிலுள்ள இந்திய துணைத் தூதுவர் என்.நடராஜன் ஆகியோர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். அதனைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்டிருந்த எம்.ஜி.ஆர் ஆதரவாளர்களும் ரசிகர்களும் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். இதன் போது தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு உடுபுடவைகளும் வழங்கி வைக்கப்பட்டது. கல்வியங்காடு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள எம்.ஜி.ஆரின் சிலையை, எம்.ஜி.இராமசந்திரனின் நண்பனும் தீவிர ரசிகனுமான சுந்தரலிங்கம் தனது சொந்த நிதியில் நிர்மாணித்தமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)

# பெண்ணுக்கும் ஆணுக்கும் 50:50



## கஜேந்திரகுமாரின் விருப்பம் இது

யாழ்ப்பாணம், ஜன.18

"எமது தேசியப் போராட்டம் பெண் சமத்துவத்துக்காக பெரும் மாற்றத்தை ஏற்படுத்த விரும்பி செயற்பட்டுவந்திருந்தது. அதே வழியில் தமிழ்த் தேசிய அரசியலிலும் 50 க்கு 50 என்ற விகிதத்தில் பெண் சமத்துவம் பேணப்பட வேண்டும். புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்களில் 70 வீதமானோர் பெண்களாக இருக்கும் சூழ்நிலையில் வீரம் செறிந்த இந்த மண்ணில் பெண்களின் பங்குபற்றுதல் அதிகளவில் இடம்பெறவேண்டும் " என வலியுறுத்தியுள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

தமிழ் தேசிய பேரவையின் உள்ளூராட்சி தேர்தலுக்கான தேர்தல் விஞ்ஞாபன வெளியீடு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்றுப் புதன் கிழமை நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இந்த மண்ணிலே விடுதலைப் போராட்டத்தினூடாக பெண்களின் பங்களிப்பு கட்டியெழுப்பப்பட்டு வந்திருந்தது. போர்ச்சூழலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பினால் அது குறைவடைந்து பூச்சிய நிலைக்குச் செல்லும் அபாயகரமான நிலை காணப்படுகின்றது.

இந்த நிலையை நாங்கள் மாற்றி அமைக்க வேண்டும். இதற்கான சிறந்த ஒரு சந்தர்ப்பம் தற்போது கிடைத்துள்ளது. நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் 25 சதவீதம் பெண்களின் பிரதிநித்துவம் இருக்க வேண்டும் என உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சதவீதம் எங்களைப் பொறுத்த வரையில் குறைவாக காணப்படுகின்ற போதிலும் இதனை ஒரு ஆரம்பமாகக் கொள்ள முடியும்.

நாங்கள் எமது கட்சி சார்பில் பெண் வேட்பாளர்களை அவர்களுடைய தலைமைத்துவத்தின் அடிப்படையிலேயே இணைத்துக் கொண்டோம். அவர்களுடைய தகுதியாக அதனை மாத்திரமே நாங்கள் கருத்திற் கொண்டோம். பெண் வேட்பாளர்கள் சுயமாகச் செயற்பட முடியாத நிலை போன்ற பல சமூக மட்ட பிரச்சினைகள் பேசப்படாமல் உள்ளன. பெண்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. அவற்றினை வெளிப்படுத்த எமது கட்சி பூரண ஒத்துழைப்பு வழங்கும். இன்று போரால் பாதிக்கப்பட்ட பிரதேசம் என்ற வகையில் பெண்களும் சிறுவர்களுமே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பெண்களுடைய பிரச்சினைகள் சமூக மட்டத்தில் பேசப்படாமல் உள்ளன. ஆனால் அவை மிகவும் ஆழமான பிரச்சினைகள். அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாம் எந்தவிதமான தடைகளையும் ஏற்படுத்தப்போவதில்லை. உங்களுக்குத் தேவைப்படும் முக்கியத்துவம் அத்தனையும் கொடுக்கப்படும். உங்களுடைய செயற்பாடுகளுக்கு எவரும் தடையாக இருந்தால் அவர்கள் அகற்றப்படுவார்கள் என்ற வாக்குறுதியையும் எமது தலைமைப் பீடம் உங்களுக்கு வழங்குகின்றது.

எம்முடைய தேசிய போராட்டம் பெண் சமத்துவத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்த விரும்பியிருந்தது. எனினும் பின்னர் வந்த சூழ்நிலைகளால் தற்போது அவை வேறு விதமாக மாறி விட்டன. பெண் சமத்துவம் என்பது ஒட்டுமொத்த சமூகம் சார்ந்தது. இந்த சமத்துவத்தின் ஊடாகவே எமது தமிழ் தேசமும் கட்டியெழுப்பட முடியும். ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்து கலந்து கொள்ளும் புலம்பெயர் தமிழர்களில் 70 வீதமானோர் பெண்களாகவே உள்ளார்கள்.

அவர்கள் தமிழ் மக்களுடைய பிரச்சினையை சிறந்த முறையில் முன்வைக்கின்றனர். இதே போன்று கடந்த கால எமது விடுதலை போராட்டத்திலும் பெண்களுடைய பங்களிப்பு என்பது உச்சமாகத் தான் இருந்தது.

தமிழ்த்தேசிய அரசியலில் பெண்களின் பங்களிப்பு 50 வீதம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்தப் பட்டால் தான் தமிழ்த்தேசிய அரசியல் வினைத்திறனாக இருக்கும். எமது அந்நிய நாடான இந்தியாவில் பெண்கள் முன்னின்று போராடுகின்றார்கள்.

ஆனால் எத்தனையோ சாதனைகளை புரிந்த எங்கள் மண்ணில் பெண் சமத்துவதில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. ஆகவே நடைபெறவிருக்கின்ற உள்ளூராட்சி தேர்தல் மூலம் பெண் சமத்துவம், சமூக மட்ட பிரச்சினைகள் ஆகியவற்றுக்கு தீர்வு காணப் பட வேண்டும். இதற்கான தெரிவை மக்கள் மேற்கொள்ள வேண்டும்" - என்றும் அவர் தெரிவித்தார். (அ)

## தனியார் மருத்துவமனைகளுக்கு அடுத்த மாதம் நிர்ணயக் கட்டணம்

கொழும்பு,ஜன.18

தனியார் வைத்திய சாலைகளில் தனிப்பட்ட வைத்திய பரிசோதனைக்கான அனுமதிக் கட்டணம், சத்திர சிகிச்சைக்கான பண அறவீடு மற்றும் ஸ்கேன் உள்ளிட்டவற்றுக்கான நிர்ணயக் கட்டணங்கள் பெப்ரவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரவுள்ளன.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சரும் அமைச்சரவைத் துணைப்பேச்சாளருமான டொக்டர் ராஜித சேனாரத்ன இவ்வாறு குறிப்பிட்டார்.

"பொதுமக்களின் நலன்கருதி இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. 48 வகையான மருந்து வகைகளின் விலைகள் குறைக்கப் பட்டது போன்று தனியார் வைத்தியசாலைகளில் அறவிடப்படும் கட்டணங்களும் இவ்வாறு குறைக்கப் படும் .

கேபிஎம் எனும் சர்வதேச நிறுவனத்திடம் இது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கேட்டுள்ளேன். இதுதொடர்பில் எதிர்வரும் சனிக்கிழமை பணிப்பாளருடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது" எனவும் ராஜித குறிப்பிட்டார். (அ)

## போதை வியாபாரி கைது

கொழும்பு, ஜன.18

மருதானை, விபுலசேன மாவத்தையில் போதை மாத்திரைகளை வைத்திருந்த சந்தேகநபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் மாளிகாவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதான சந்தேகநபர் ஒருவரையே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொழும்பு மத்திய பொலிஸ் நிலையத்தின் குற்றப்புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளினால் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது அவரிடமிருந்து 608 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகநபரை மேலதிக விசாரணைக்காக மருதானை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் காரியாலயும் அறிவித்துள்ளது. (அ)

## தொலைபேசியைச் செருகி தாயைக் கொன்றவர் கைது

கொழும்பு,ஜன.18

தனது தாயின் தொண்டையில் தொலைபேசியைச் சொருகி மூச்சுத்திணறலை ஏற்படுத்தி கொலை செய்த மகனை ஊவா பரணகம பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

ஊவா பரணகம - மொரகொல்ல உமான கிராமத்தைச் சேர்ந்த 61 வயதான ரத்னாயக்க முதியன்சலாகே கருணாவதி என்ற தாயே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.


சந்தேகநபர் தன்னுடைய தாய் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளதாகத் தெரிவித்து கடந்த 16ஆம் திகதி பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்துள்ளார்.


15ஆம் திகதி தானும், தன்னுடைய மனைவியும் வீட்டை விட்டு வெளியே சென்றதாகவும், மறுநாள் காலை வீட்டுக்கு வந்த போது தனது தாய் உறங்கிய நிலையிலேயே உயிரிழந்திருப்பதாகவும் சந்தேகநபர் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

எனினும், குறித்த மரணம் சந்தேகத்துகிடமாக உள்ளதாகத் தெரிவித்து நீதவான் விசாரணைகளை முன்னெடுத்ததாகவும், நீதவானின் உத்தரவுக்கமைய பிரேத பரிசோதனைகளுக்காக உயிரிழந்த பெண்ணின் உடலம் பதுளை தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும்பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பிரேத பரிசோதனைகள் நேற்றைய தினம் நீதிமன்ற விசேட வைத்தியர் முன்னிலையில் நடைபெற்றது. இதன்போது மூச்சுத்திணறல் ஏற்பட்டு குறித்த தாய் உயிரிழந்துள்ளமை தெரிய வந்துள்ளது.

இதற்கமைய, தொலைபேசியை குறித்த தாயின் தொண்டைக்குள் சொருகி மூச்சுத்திணறலை ஏற்படுத்தி கொலை செய்யப்பட்டுள்ளமை விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக பொலிஸார்தெரிவித்துள்ளனர். (அ)





## எங்கடை ஓல்ட் போயிஸுக்கு உது தெரியாதோ?

இல்லாததை இருக்கெண்டு சொல்லி ஏமாத்தினால், இருக்கிறது இல்லாமல் போவிடும். இல்லாம்லிருக்கிறதை இருக்கிறதெண்டாலும், இருக்கிறது இல்லாதது எண்டாகிவிடும். எண்ட படியால் இருக்கிறதை இருக்கிறதாச் சொல்லுங்கோ. இல்லாததை இல்லை எண்டு சொல்லுங்கோ. இல்லாததை இருக்கெண்டு நம்பப் பண்ணினாலும் பிழை, இருக்கிறதை இல்லை எண்டு நம்பப்பண்ணினாலும் பிழை. ஆன படியால் இருக்கிறதை இருக்கிறதாச் சொல்லப் பழ்குங்கோ இல்லாததை இல்லை எண்டு சொல்லப் பழகுங்கோ. எண்டு கூட்டமைப்பை மிகவும் மண்டாட்டவ மாகவும் தாழ்மையுட னும் கேட்டுக் கொள்ளுகிறான் இந்த வில்லங்கம் பிடிச்ச விநாசித் தம்பி.

போன செவ்வாய்க்கிழமை நீட்டு நிமிந்து படுப்பம் எண்டு ஒருக்காச் சரிஞ்சன். முதலிதான் ஆத்துப் பறக்க ஓடிவந்தான். அண்ணை வீரசிங்கம் மண்டபத்திலை பேரவைக் கூட்டம் எண்டு கேள்விப்பட்டன். ஒருக்காப் போய்ப்பாப்பம். வா எண்டான். நாலு மணிக்குக் கூட்டம் எண்டதாலை சைக்கிள் உளக்கேலாது. பஸ்ஸிலை வேணுமெண்டால் வாறன் எண்டன். வழக்கமா அடம் பிடிக்கிறவன் அண்டைக்கு ஓம் எண்டிட்டான். ஏனெண்டால் முதலமைச்சர் பேசுறதைக் கேக்க வேணுமெண்ட அவாவிலைதான் ஓமெண்டவன்.

போனால் கிட்டத்தட்ட மண்டபம் முட்டினமாதிரி எண்டு சொல்லுங் கோவன். இரண்டு கதிரையைப் பிடிச்சு இருந்தம். யூனிவசிற்றி குருபரனும் முதலமைச்சரும் பேசினதுதான் திறமான பேச்சு. சில விசியத்தைச் சரியாச் சொல்லிச்சினம் எண்டதைவிட உண்மையை உண்மையாச் சொல்லிச் சினம். அரசியல் திருத்தச் சட்டம் என்னத்தைச் சொல்லுது? அதிலை உள்ள உள்ளுடனை சிங்களவருக்கு ஒரு மாதிரியும், தமிழருக்கு ஒரு மாதிரியும் எப்பிடிச் சொல்லினம்? ஏன் அப்பிடிச் சொல்லினம்? ஆற்றை பக்கப்பாட்டோடை உது நடக்கிது? எங்கடை "ஓல்ட் போயிஸ்" ஏன் உதை நல்லது எண்டு சொல்லினம்? அவைக்கு உதாலை என்ன லாபம்?

உந்தக் கூட்டம் முதலிலை கம்பஸிலைதான் நடக்கிறதுக்கு ஒழுங்கு பண்ணினவையாம். பிறகு கம்பஸ் வீ.சி க்க ஒரு கடிதம் வந்ததாம் உந்தக் கூட்டத்திலை அரசியல் கதைச்சால் வில்லங்கம் எண்டும் தேர்த்தல் சட்டத்துக்குப் புறம்பானது எண்டும் எழுதினதாலை வீ.சி வைக்க விடேல்லையாம். பிறகு அவை வீரசிங்கம் மண்டபத்துக்கு மாத்தினாப்போலையும் அவைக்கும் கடிதம் வந்ததாம். கூட்டத்தை வைக்காமல் பண்ண. ஆனால் அங்கை உவையின்ரை பருப்பு அவியேல்லையாம் எண்டும் கேள்வி.

ஒரு நாடு எண்ட்துக்கும் ஒருமித்த நாடு எண்டதுக்கும் எத்தினை வித்தியாசம். "அவனைக் கொண்டு சிலம்பைக் கொணர்க" "அவனைக் கொன்று சிலம்பைக் கொணர்க" இரண்டும் தமிழ் தான். ஆனால் கோவலன்ரை உயிர் போனப் பிறகு கொண்டால் என்ன? கொன்றால் என்ன? அது உந்தக் கூட்டமைப்பு ஓல்ட் போயிஸிற்குத் தெரியாதோ? உந்த ஏக்க இராஜ்ஜியத்தை ஏற்கிறதும் சரி. வெள்ளைப் பேப்பரிலை கையெழுத்து வைச்சுக் குடுக்கிறதும் சரி.

இரண்டும் ஒண்டுதான்.

இரயிலுக்கை கழுத்தைக் குடுக்கிற மாதிரி. ஒண்டும் மிஞ்சாது. முண்டமாத்தான் போகும். சட்டத்தை ஏற்றுப் போட்டு அவங்கள் வந்து காணியைச் சுவீகரிக்கிறமெண்டால் இப்ப கேப்பாப்பிலவிலை கத்திறமாதிரி பிறகு கத்தேலாது. சட்ட மீறல் எண்டு சொல்லி பிடிச்சு அடைச்சு வாழ்க்கையிலை வெளியிலை வராத மாதிரிப் பண்ணிப் போடுவங்கள். அதோடை ஒண்ட விட்ட ஒண்டுக்கை மச்சானும் மாமனும் வந்து பூந்திடுவங்கள். அப்ப "கூத்தாடிக்குத்தான் கொண்டாட்டம்"

அதாலை எல்லாத்துக்கும் முன்னம் நல்லா யோசியுங்கோவன்.

**வில்லங்கம் விநாசி**

நீர்வேலியில் கத்தி முனையில்

# இரண்டு வீடுகளில் கொள்ளை

யாழ்ப்பாணம், ஜன. 18

அதிகாலை வேளை இரு வீடுகளுக்குள் புகுந்த கொள்ளைக் கும்பல் கத்தி முனையில் நகைகள் மற்றும் பெறுமதியான பொருள்களை கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றது.

நேற்றுப் புதன்கிழமை அதிகாலை 2 மணியளவில் நீர்வேலி வடக்கு இராச பாதை வீதியுள்ள இரண்டு வீடுகளிலேயே இக் கொள்ளை இடம்பெற்றுள்ளது.

ஒரு வீட்டில் இருந்தவர்களைத் தாக்கி விட்டு கத்தி முனையில் 15 பவுண் தங்க நகைகளைக் கொள்ளையிட்டது. அயலில் உள்ள மற்ற வீட்டுக்குள் புகுந்த கொள்ளைக் கும்பல் அங்கு வசித்த வயோதிபத் தம்பதியரைத் தாக்கிவிட்டு நகைகள் மற்றும் பெறுமதியான பொருட்களை கொள்ளையிட்டுத் தப்பித்தது.

வயோதிபத் தம்பதிகளுக்குத் துணையாக அவர்களது மகன் தினமும் இரவில் அங்கு சென்று தங்குவார். எனினும் நேற்றிரவு அவர் செல்லவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. சம்பவங்கள் தொடர்பில் பொலிஸ் அவசர சேவைக்கு அறிவிக்கப்பட்டது. இதனடிப்படையில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச)

# தீர்த்தவர்களையே ஆதரியுங்கள் அவலங்களை பேசியோரை அல்ல

## இப்படிக் கேட்கிறார் டக்ளஸ் எம்.பி.



யாழ்ப்பாணம், ஜன.18

"மக்களின் அவலங்கள் பற்றிப் பேசியவர்களை விடுத்து அவற்றைத் தீர்த்து வைத்தவர்களையே ஆதரிக்க வேண்டும். கடந்த காலங்கள் போன்று உசுப்பேத்தல் அரசியலை நம்பி ஏமாறாதீர்கள்"

இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருக்கிறார்.

கட்சித் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தெற்கில் மட்டுமல்ல வடக்கிலும் மாற்றத்தைக் கொண்டு வரும் என்றே பார்க்கப்படுகின்றது. வடக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் தமிழ் மக்கள் தமது பாரம்பரிய நடைமுறைகளை மாற்றி யதார்த்தவாதிகளிற்கு ஆதரவு கொடுக்கும் நிலை காணப்படுகின்றது.

எதிர்க்கட்சியாக இருப்பதால் எதையும் செய்ய முடியாதுள்ளது எனக் கூறியவர்கள். இன்று ஆளும் கட்சியாக இருந்தும் எதையும் செய்யவில்லை. முகமூடிக் கொள்ளையர்கள் போன்று ஒருதரப்பு இடைக்கால அறிக்கையை ஆதரிக்குமாறும், இன்னொரு தரப்பு ஆதரிக்க வேண்டாம் என்றும் மக்களைக் கோருகின்றன. ஆனால் அவர்கள் எல்லோரும் ஒரே செயலையே செய்கின்றனர்.

கஸ்தூரியார் வீதியில் அமைக்கப்பட்ட ஐந்து மாடிக்கட்டடத் தொகுதியை வைத்து எம் மீது சேறு பூசவே விசாரணைகள் இடம்பெறுகின்றன. நாம் உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றி ஆட்சி அமைக்கும் போது கடந்த காலங்களில் இடம்பெற்ற மோசடிகள் குறித்து விசாரிப்போம் - என்றார். (ச)

# லஞ்சம், ஊழலை விசாரிக்க விசேட மேல் நீதிமன்றம்

கொழும்பு, ஜன 18

லஞ்சம், ஊழல் குற்றச்சாட்டுக்கள் மற்றும் மிகவும் சிக்கலான நிதி மோசடிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான வழக்குகளைத் துரிதமாக விசாரிக்க விசேட மேல் நீதிமன்றம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக நீதியமைச்சர் தலதா அத்துக்கோரள முன்வைத்த ஆலோசனை தொடர்பில் அமைச்சரவை கவனம் செலுத்தியுள்ளது.

இந்த யோசனைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது என நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் காணி அமைச்சரும் அமைச்சரவைத் துணை பேச்சாளருமான கயந்த கணாதிலக்க தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மூன்று நீதிபதிகள் அடங்கிய குழாமின் மூலம் வழக்குகளை விசாரிக்கக் கூடிய மேல் நீதிமன்றம் அமைக்கப்படும். இதற்காகச் சட்ட வரைஞர் திணைக்களம் பிரேரணையை உருவாக்கியுள்ளது. இந்தப் பிரேரணை சட்டமா அதிபர் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது -என்றார். (ச)

# தொடர்ச்சிகள்

## வல்லரசுகளும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாங்கிப் பேசிய அவர் கூறியவை வருமாறு

"இன்றுள்ள தமிழ் மக்களின் பிரதிநிதிகள் பொய்களை சொல்லி ஏமாற்றி வருகின்றனர். எமது கொள்கைகளையும் நேர்மையையும் ஏற்று மக்கள் எம்மோடு இணைந்து வந்திருக்கின்றனர். இதனால் தடைகளைத் தாண்டி மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

2009 ஆம் ஆண்டின் பின், நாம் மக்களிடம் சொல்லி வந்ததை ஏற்று வருகின்றனர். ஆனால் அப்போதெல்லாம் எம் மீது குற்றச்சாட்டுக்களே முன்வைக்கப்பட்டு அவமானங்கள் ஏற்படுத்தப்பட்டன. நாம் பணத்துக்கு விலை போய்விட்டோம் என மிகக் கேவலமாக விமர்சித்தார்கள்.

அன்றும் சரி இன்றும் சரி நாம் மக்களுடனே இருக்கிறோம். அத்றகாக எந்தவொரு கட்டத்திலும் மக்களுக்குப் பொய் கூறவில்லை. ஏனெனில் எமது அரசியல் தூய்மையானது - நேர்மையானது. மக்களின் நிலையை விளங்கி இருப்பைத் தக்க வைக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறோம்.

நாங்கள் கூறிய உண்மையை மக்கள் தற்போது விளங்கியுள்ளனர். எம் வளர்ச்சியை - மக்கள் மத்தியிலான செல்வாக்கை முடக்க தமிழ்க் கட்சிகளும் இலங்கை அரசாங்கமும் திட்டமிட்டு செயற்பட்டன. இவர்களுடன் வல்லரசுகளும் சேர்ந்து இயங்கின.

தமிழ்த் தேசம் இன்று சிங்கள தேசத்துடன் கரைந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் நாம் எம் கொள்கையில் உறுதியாக உள்ளோம். மக்களுக்கு உண்மையை மட்டுமே சொல்லி வந்ததால் தமிழ்த் தேசிய அரசியலில் தற்போது தீர்மானிக்கும் சக்தியாக மாறியிருக்கிறோம்." (ச)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியா நகரசபை தேர்தலில் ஆறாம் வட்டாரமாகிய நகரப்பகுதியில் கூட்டமைப்பில் போட்டியிடும் வேட்பாளர் ரி.கே.இராஜலிங்கம் மற்றும் ரேணுகா ஆகியோரின் தேர்தல் பிரசார அலுவலகத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"கிராமிய மற்றும் நகர அபிவிருத்திக்கான தேர்தல் என்பதைக் கடந்து சில அரசியல் ரீதியான முரண்பாடான கருத்துக்களை இந்தத் தேர்தலில் பலர் முன்வைத்து வருவதைக் காணக் கூடியதாக இருக்கிறது. அந்த வகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இரண்டு விடயங்களில் அரசுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றது என்ற குற்றச்சாட்டை இன்று பலர் முன்வைத்து வருகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும், வடக்கு - கிழக்கு பிரதேசத்தையும் சிதைப்பதற்கான வேலைகள் தென்னிலங்கையில் நடைபெறுகின்றன. இன்று பொது எதிரியாக எல்லோரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பையே கருதி வருகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலவீனப்படுத்தி, சர்வதேச அழுத்தத்துடன் வருகின்ற அரசியல் தீர்வு என்ற விடயத்தை பலவீனப்படுத்தும் வகையில் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது பழிக சுமத்தப்படுகிறது. நாங்கள் பலமாக ஆயுத முனையில் இருந்தோம் என்றால் எதற்கும் கலங்கத்தேவையில்லை. ஆயுதப் பலம் மெளனிக்கப்பட்ட பின்னர் அந்தப் பொறுப்பை தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெற்றிருக்கிறது.

எங்களுடைய இனப்பிரச்சினைக்கான நிரந்தர தீர்வை புதிய அரசியலமைப்பு ஊடாக பெறவேண்டும் என்ற நோக்கில் செயற்படுகின்றோம்.

உலகத்தையே விஞ்சுகின்ற வகையில் எமது ஆயுதப் போராட்டம் இடம்பெற்ற காலத்திலும் கூட விடுதலைப் புலிகள் தங்களது இராஜதந்திர நகர்வுகளை பல வழிகளிலும் மேற்கொண்டார்கள். அவர்கள் பிரேமதாசவுடன் பேசினார்கள். கொடுங்கோல் ஆட்சி செய்த மகிந்த ராஜபக்சவுடனும் பேசினார்கள். அந்த வகையில் போரின் தந்திரங்களாகவும், எவ்வாறு அதனை கொண்டு போக வேண்டும் என்ற வகையிலும் சோரம் போகாத ஒரு போராட்டத்தை அவர்கள் செய்தார்கள். அதேபோல் தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் மக்களது இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் சோரம் போகாது தங்களது கடமைகளைச் செய்கிறது. அதை இங்கு இருக்கின்ற பல கட்சிகள்தான் உண்மையில் அரசுடன் சோரம் போய்விட்டார்கள். இவர்கள் அரசாங்கத்துடன் சேர்ந்து கூட்டமைப்பினரே சோரம் போய் விட்டார்கள் என்று அவப்பெயரை ஏற்படுத்துகிறார்கள். இதை ஏன் அவர்கள் ஒரு இராஜதந்திரமாக ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள் என்ற கேள்வியை நான் எழுப்புகின்றேன். நாங்கள் இந்த அரசாங்கத்துக்கு அடிவருடிகளாகவும், சோரம் போனவர்களாகவும் எந்தக் காலத்திலும் செயற்படவில்லை.

புதிய அரசியலமைப்பு மாற்றம் பெறுகின்ற சந்தர்ப்பத்தை நாங்கள் ஒரு கருவியாக பயன்படுத்த வேண்டும். சர்வதேச சமூகம் எப்படி எங்களது ஆயுதப் போராட்டத்தை மெளனிக்கச் செய்ததோ, எப்படி கொடுங்கோல் ஆட்சியை மாற்றியதோ அதைப் போல் இந்த சர்வதேச சமூகத்திடம் நியாயம் கேட்கும் வகையில் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காய்களை நகர்த்துகிறதே தவிர, ஐக்கிய தேசியக் கட்சியிடமோ, ஜனாதிபதியிடமோ சோரம் போகவில்லை. போராட்டத்திலும் சரி, அரசியலிலும் சரி சில இராஜதந்திரங்களுடன் உருவாக்கப்பட்ட மற்றும் செயற்பட்ட வரலாறுகளை நாம் பார்க்க வேண்டும். அது தான் வெற்றியளித்திருக்கிறது. இவர்கள் ஒன்றுக்குமே சரிவர மாட்டார்கள் என்று தென்னிலங்கை சொல்லுகின்ற அந்த வாய்ப்பை நாங்கள் முற்றாக நிறுத்தி அவர்களுக்கு நாங்கள் சந்தர்ப்பத்தை வழங்கினோம். ஆனால் இவர்கள் பல விடயங்களை தரமறுக்கிறார்கள் என்ற நியாயப்பாட்டை சொல்லுவதற்கு சந்தர்ப்பங்கள் வேண்டும் அதற்கேற்பவே நாம் செயற்படுகின்றோம்" என்றார். (அ)

## ஆட்சிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணமலை மாவட்டத்திலிருந்து மாற்றுக் கட்சியைச் சேர்ந்த ஒரு தமிழ்ப் பிரதிநிதி கூடத் தெரிவு செய்யப்படவில்லை. ஆனால், யாழ்ப்பாணத்தில் - மட்டக்களப்பில் - வன்னியில் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். இது மக்கள் உறுதியாக இருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது.

சர்வதேச ரீதியில் இந்தத் தேர்தலை பலர் உற்று நோக்குகின்றனர். வடக்கு, கிழக்கு மக்கள் விசேடமாக ஒருமித்து நிற்கின்றார்களா என்று? ஐக்கிய நாடுகள் சபையின் அடிப்படை பிரகடனத்தின்படி மக்களை அவர்களின் சம்மதம் இல்லாமல் ஆட்சி செய்ய முடியாது. ஆனால் கடந்த 70 வருடங்களாக எமது சம்மதம் இல்லாமல் எங்களை இந்த நாட்டினர் ஆட்சி செய்கின்றனர்.

இது ஒரு தொடர்கதையாகவே உள்ளது, 1947 முதல் இன்று வரை இந்த நாட்டை ஆண்டவர்களுக்கு சம்மதத்தை நாம் கொடுக்கவில்லை. சம்மதம் இல்லாமலேயே நம்மை ஆண்டு வருகிறார்கள். இதை ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் பான்கிமூன் இலங்கைக்கு வந்திருந்த போது நான் தெளிவாக சொல்லியிருந்தேன். ஒருமித்த நாட்டுக்குள் நியாயமான அந்தஸ்தை பெற்றுக் கொள்ள முயற்சிக்கின்றோம். அது நடக்காவிடின் எமது சம்மதம் இல்லாமல் நடைபெறும் ஆட்சியை நிறுத்த வேண்டிய நிலை ஏற்படும் - என்றார். (ச)

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பதிவு செய்யப்பட்ட தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் முன்னாள் போராளிகள் இந்த உதவித் தொகைப் பெற முடியும். பணியாற்றும் நிறுவனத்தால் அவர்களுக்கு ஊழியர் சேமலாப நிதித் தொகை செலுத்தப்பட்டிருக்க வேண்டும்.

இந்த விடயங்கள் பின்பற்றப்படும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் மறுவாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் தமது விவரங்களை யாழ். மாவட்ட செயலகத்தின் புனர்வாழ்வுக் கிளையில் பதிவு செய்யவேண்டும்.

தகுதியானவர்களுக்கான 10 ஆயிரம் ரூபா உதவித் தொகை அவர்கள் பணியாற்றும் நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்படும்" என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ச)

## காங்கேசன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றினர். அத்துடன் தங்கத்தைக் கடத்த முயன்றனர் என்ற குற்றச்சாட்டில் வடமராட்சியைச் சேர்ந்த இருவரைக் கைது செய்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட தங்கத்தின் மதிப்பு சுமார் 5 கோடி ரூபா இருக்கும் எனக் கூறப்படுகின்றது. கைதானவர்களை சுங்கப் பிரிவினர் ஊடாக நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச)

## ஜனாதிபதியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

ஜனாதிபதி குறித்து ஐக்கிய தேசியக் கட்சியினர் கடும் விமர்சனங்களை அண்மைக்காலமாக வெளியிட்டு வருகின்றனர். பதிலுக்கு சுதந்திரக் கட்சியினரும் பிரதமரைக் குறி வைத்து விமர்சித்து வருகின்றனர். தேசிய அரசில் அங்கம் வகிக்கும் இரு கட்சியினரதும் இந்நடவடிக்கையால் ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்க்கவே பிரதமர் இந்த முடிவை எடுத்தார் எனக் கூறப்படுகின்றது. (ச)

## பிரியாவிடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் இரத்தினம் விக்னேஸ்வரன், பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கன், கலாநிதி சந்திரபண்டார, பேராசிரியர் கா. குகபாலன், ஆளுரநரின் செயலாளர் எல்.இளங்கோவன், சங்கானை கோட்டக் கல்வி பணிப்பாளர் ராசலிங்கம் சிவசங்கர் உட்படப் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (ச)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தெரிவித்தார்.

பிணைமுறி மோசடி தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையும் ஊழல் மோசடிகளை விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் 34 அறிக்கைகளும் இன்று (நேற்று) கிடைத்தன எனத் தெரிவித்த சபாநாயகர், இந்த அறிக்கைகள் வரும் 23ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்.

நாடாளுமன்றக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இது தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்கப்படும் என்றும் கூறினார்.

மத்திய வங்கி பிணைமுறி விவகார ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைக்குரிய 26 பிரதிகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அறிக்கை ஆங்கில மொழியில் உள்ளது. அதனை தமிழ், சிங்கள மொழிகளில் மொழி பெயர்க்க வேண்டும் என்றும் அவர் சொன்னார். (ச)



# எம்.ஜி.ஆருக்கு 101

சென்னை, ஜன. 18

அ.தி.மு.க. நிறுவனத் தலைவர் எம்.ஜி.ஆரின் 101ஆவது பிறந்த நாள் நேற்றுக் கொண்டாடப்பட்டது. இதையொட்டி அ.தி.மு.க. தொண்டர்கள் தங்கள் பகுதிகளில் எம்.ஜி.ஆரின் திருவுருவப்படங்களை அலங்கரித்து வைத்து மரியாதை செலுத்தினர். அன்னதானம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினர்

இந்நிலையில், எம்.ஜி.ஆர். பிறந்தநாளை முன்னிட்டு சென்னை கிண்டியில் உள்ள டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள எம்.ஜி.ஆர்.சிலைக்கு முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் மலரஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

இதேபோல் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள எம்.ஜி.ஆர். சிலைகளுக்கு அந்தந்தப் பகுதி நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். (ஐ)



# பிரகாஷ்ராஜை அவமதித்த பாஜக

பெங்களூர், ஜன. 18

நடிக்ர் பிரகாஷ்ராஜ் பேசிவிட்டுச் சென்ற மேடையைச் சுத்தப்படுத்தி அவரை அவமதிக்கும் செயலைச் செய்த பாரதீய ஜனதா கட்சியினர் மீது விமர்சனங்கள் எழுந்துள்ளன.

பிரபல திரைப்பட நடிகர் பிரகாஷ்ராஜ் தனது டுவிட்டர் மூலம் அரசியல் குறித்து பல்வேறு கருத்துகளைத் தெரிவித்து வருகிறார். குறிப்பாக மத்தியில் ஆளும் பாரதீய ஜனதாவை விமர்சித்து வருகிறார்.

இந்நிலையில், கர்நாடகாவில், சிர்சி நகரில் நடந்த நிகழ்ச்சியில் பேசிய பிரகாஷ்ராஜ், மத்திய அமைச்சர் அனந்த் குமார் ஹெக்டேவை கடுமையாக விமர்சித்தார். இது பாஜக இளைஞர் அணியினர் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தியது.

இதையடுத்து பாஜக இளைஞர் அமைப்பினர், நிகழ்ச்சி முடிந்த பின்னர் நடிகர் பிரகாஷ்ராஜ் பங்கேற்ற விழா மேடை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளை, பசுவின் கோமியத்தால் கழுவிச் சுத்தம் செய்தனர்

இது குறித்து டுவிட்டரில் கருத்து தெரிவித்துள்ள பிரகாஷ்ராஜ், "நீங்கள் தொடர்ந்து இந்த மாதிரியான துப்புரவில் ஈடுபடவேண்டும். நான் எப்போதும் சுத்திகரிப்புச் சேவை செய்கிறேன். நான் சுத்திகரிப்புச் சேவைக்காக எங்கும் செல்வேன்" எனக் கூறி உள்ளார். (ஐ)

# சிறுமியை துன்புறுத்திய கும்பல் பொலிஸிடம் மாட்டியது

திருவனந்தபுரம், ஜன. 18

கேரளாவில் 16 வயதுச்சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்து விபசாரத்தில் தள்ளிய கொடுமை நடந்துள்ளது. இது தொடர்பாக பொலிஸ் அதிகாரிகள் சிலர் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

கேரள மாநிலம் ஆலப் புழாவில் ஒதுக்குப்புறமான பகுதியில் உள்ள ஒரு வீட்டுக்கு அடிக்கடி ஏராளமான ஆண்கள் வந்து சென்றனர். இதைப் பார்த்து சந்தேகம் அடைந்த அந்தப் பகுதி மக்கள் இது குறித்துப் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர்.

இதைத் தொடர்ந்து பொலிஸார் அந்த வீட்டை ரகசியமாக நோட்டமிட்டனர். பின்னர் அங்கு அதிரடியாகப் புகுந்து சோதனை செய்தனர். அப்போது அங்கு 16 வயது மதிக்கத்தக்க ஒரு சிறுமியை வைத்து விபசாரம் நடப்பது தெரியவந்தது.



சிறுமியை விபசாரத்தில் ஈடுபடுத்திய ஆழப்புழாவை சேர்ந்த 35 வயதுடைய பெண்ணைப் பொலிஸார் கைது செய்தனர். அந்தச் சிறுமியும் மீட்கப்பட்டு காப்பகத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

சிறுமியை விபசாரத்தில் ஈடுபடுத்திய பெண் மற்றும் பாதிக்கப்பட்ட சிறுமியிடமும் பொலிஸார் நடத்திய விசாரணைகளின்போது பல அதிர்ச்சித் தகவல்கள் வெளியானது.

தனியார் பள்ளி ஒன்றில் 11ஆம் வகுப்பில் படித்து வந்த அந்தச் சிறுமியின் ஏழ்மையைப் பயன்படுத்தி, பண ஆசை காட்டி அவரை பெண் ஒருவர் விபசாரத்தில் ஈடுபடுத்தி வந்துள்ளார்.

பொலிஸ் அதிகாரிகள், தொழில் அதிபர்கள் என்று பலருக்கும் அந்தச் சிறுமியை விருந்தாக்கி உள்ளார். இது தொடர்பாக பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி சிறுமியை கற்பழித்ததாக பொலிஸார் சிலரையும் கைது செய்தனர்.

மேலும் விபசாரத்துக்கு உதவியதாக குறித்த பெண்ணின் கள்ளக்காதலன் மற்றும் அவரது நண்பர் ஆகியோரும் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சிறுமியைக் கற்பழித்த மேலும் பல பொலிஸ் அதிகாரிகள், தொழில் அதிபர்கள் பற்றியும் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது. அவர்களைக் கைது செய்யவும் பொலிஸார் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். (ஐ)



# பனியில் உறைந்த சாகச இளைஞர்

சைபீரியாவில், ஜன. 18

சைபீரியாவில் 40 அடி உயரக் கட்டடத்தில் சாகச இளைஞனின் சடலம் உறைபனியில் சிக்கியிருந்து மீட்கப்பட்டுள்ளமை அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

யூவ்ஜெனி டிகோனோவ் (வயது-26) என்ற இளைஞர் உயரமான கட்டடங்கள் மீது ஏறுவதில் வல்லவராவார். இதை தொழில்முறையாகவே அவர் கற்றுள்ளார்.

இந்நிலையில் சில தினங்களுக்கு முன்னர் 40 அடி உயரக் கட்டடத்தில் யூவ்ஜெனி சடலமாக தொங்கியபடி இருந்துள்ளார். அவர் தலைப் பகுதி முழுவதும் பனி படர்ந்திருந்தது. இதைப் பார்த்த இளம் பெண் ஒருவர் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்த நிலையில் சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் சடலத்தை மீட்டனர்.

அவர் தற்கொலை செய்திருக்கலாம் என எவரும் இதுவரை கூறவில்லை. யூவ்ஜெனி உயிரிழந்த இரவில் - 27 பாகை செல்சியஸ் அளவு குளிர் இருந்துள்ளது. இதை விட மிகப் பெரிய உயரமான கட்டடங்களில் எளிதாக ஏறியிருக்கும் யூவ்ஜெனியின் இறப்பு பலரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

அவரின் இறப்புக்கான காரணம் மற்றும் சூழல் என்னவென இன்னும் தெரியாத நிலையில் பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள். (ஐ)

# கமல் கட்சி பெப். 21இல் அறிவிப்பு



சென்னை, ஜன. 18

கமலஹாசனின் கட்சியின் பெயர் பெப்ரவரி 21ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளது.

நேற்றுமுன்தினம் நள்ளிரவில் வெளியிட்டுள்ள அறிக்கையில் நடிகர் கமல்ஹாசன்,

"என்னை வளர்த்த என் சமூகத்துக்கு நிறைய நன்றி சொல்லியிருக்கிறேன். சொல்லில் சொன்ன நன்றியைத் தாண்டி கடமைகள் நிறைய இருக்கின்றன. அந்தக் கடமைகளின் தொடக்கமாக எம் மக்களை நேரில் சந்திக்கும் அரசியல் பயணத்தை நான் பிறந்த ராமநாதபுரத்தில் இருந்து பெப்ரவரி 21ஆம் திகதி தொடங்க இருக்கிறேன். அன்று கட்சி பெயரை அறிவிப்பேன்." எனத் தெரிவித்துள்ளார். (ஐ)

# மடிக்கக்கூடிய கைத்தொலைபேசி

சம்சுங் நிறுவனத்தின் மடிக்கக்கூடிய ஸ்மார்ட் கைத்தொலைபேசி வெளியீடு மற்றும் புதிய தகவல்கள் தெரியவந்துள்ளன.

சம்சுங் நிறுவனத்தின் மடிக்கக்கூடிய வசதி கொண்ட முதல் கைத்தொலைபேசி (கலக்ஸி ஓ) அடுத்த மாதம் வெளியிட இருப்பதை அந்நிறவன கைத்தொலைபேசிப் பிரிவுத் தலைவர் அதிகாரப்பூர்வமாக உறுதி செய்திருக்கிறார்.

ஏற்கனவே வெளியான தகவல்களில் ஸ்மார்ட் கைத்தொலைபேசியை ஒரு பக்கமாக மடித்து டப்லெட் போன்று பயன்படுத்த முடியும் என தெரிவித்திருந்த நிலையில், இம்முறை வெளியாகியுள்ள தகவல்களில் ஸ்மார்ட் கைத்தொடலைபேசியை மேல் பக்கமாக மடிக்க முடியும் என்பது தெரியவந்துள்ளது. (ஐ)



# நீங்கியது தடை திரையில் சினிமா

சவுதி அரேபியாவில் 35 ஆண்டுகள் தடைக்குப் பின்னர் திறக்கப்பட்ட திரையரங்கில் முதல் படமாக இமோஜி திரைப்படம் திரையிடப்பட்டது.

பொது வெளியில் ஆணும், பெண்ணும் ஒன்றாக அமர்ந்து திரைப்படம் பார்ப்பது ஒழுக்கநெறிக்கு எதிரானது எனக் கூறி சவுதியில் 1980களில் திரையரங்குகளில் திரைப்படம் போடுவது நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# சாய்ந்தது பாலம்: மாண்டனர் 9 பேர்

கொலம்பியா, ஜன. 18

கொலம்பியாவில் 450 மீற்றர் நீளம் கொண்ட ஒரு பாலம் கட்டப்பட்டு வந்த நிலையில் அது திடீரென இடிந்து விழுந்ததில், 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில், கண்டிநமார்கா, மேதா மாகாண எல்லைகளுக்கு இடையே சிரஜாரா என்ற இடத்தில் 450 மீற்றர் நீளம் கொண்ட ஒரு பாலம் கட்டப்பட்டு வந்தது. இந்தப் பாலம், அந்த நாட்டின் தலைநகர் பகோட்டாவையும், வில்லாவிசென்சியோ நகரையும் இணைக்கிற நெடுஞ்சாலையின் ஒரு அங்கமாகும்.

இந்தப் பாலத்தின் ஒரு பகுதி கட்டி முடிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் திடீரென இடிந்து விழுந்தது. இதில் கட்டுமானத் தொழிலாளர்கள் சிக்கிக்கொண்டனர். இந்த விபத்தில் 9 கட்டுமானத் தொழிலாளர்களை பிணங்களாகத்தான் மீட்க முடிந்தது. 5 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ஐ)

# அவுஸ்திரேலிய ஓபன்: மூன்றாவது சுற்றில் நடால்



மெல்பேர்ண், ஜன. 18

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் நடால், ஜைல்ஸ் முல்லர் மற்றும் எலினா சுவிட்டோலினா ஆகியோர் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினர்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் மெல்பேர்ண் நகரில் நடைபெற்று வருகிறது.

இதில், நேற்று நடைபெற்ற போட்டி ஒன்றில் உலகின் 4ஆம் நிலை வீராங்கனையான எலீனா சுவிட்டோலினா (உக்ரைன்) 2ஆவது சுற்றில் செக் குடியரசைச் சேர்ந்த கத்ரினாவை எதிர்கொண்டார். இதில் சுவிட்டோலினா 4:6, 6:2, 6:1 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றி பெற்று 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் மர்தா கோஸ்யூர் (உக்ரைன்) 6:3, 7:5 என்ற புள்ளிக் கணக்கில் ஏலவியாவை (அமெரிக்கா) வீழ்த்தினார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் 23ஆம் நிலை வீரரான ஜைல்ஸ் முல்லர் (லக்சம்பர்க்) ஜாசிரியை (துனிசியா) எதிர் கொண்டார். இதில் முல்லர் 7:5, 6:4, 6:7, 3:6, 6:2 என்ற புள்ளிக் கணக்கில் வென்று 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆட்டத்தல் முதல் நிலை வீரரான ஸ்பெய்னின் ரபேல் நடால், மயேரை 6:3, 6:4, 7:6 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். (ஐ)

# பறித்தது தென்னாபிரிக்கா



செஞ்சூரியன், ஜன. 18

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை பறிகொடுத்தது இந்திய அணி.

விராட் கோஹ்லி தலைமையிலான இந்தியக் கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுவருகிறது.

இதில், கேப்டவுனில் நடந்த முதலாவது டெஸ்டில் தென்னாபிரிக்கா 72 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது.

இந்த நிலையில், 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி செஞ்சூரியனில் நடந்தது. இதன், முதல் இன்னிங்ஸில் தென்னாபிரிக்க அணி 335 ஓட்டங்களையும், இந்திய அணி 307 ஓட்டங்களையும் சேர்த்தன.

பின்னர், 28 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆவது இன்னிங்ஸை ஆடிய தென்னாபிரிக்க அணியில், நட்சத்திர வீரர் டிவில்லியர்ஸ் ( 80 ஓட்டங்கள்), டீன் எல்கர் (61 ஓட்டங்கள்) ஆகியோர் ஓரளவு சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ஏனைய வீரர்கள் சீரான இடைவெளியில் விக்கெட்டுகளைப் பறிகொடுத்தனர். இறுதியில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 258 ஓட்டங்களைச் சேர்த்தது தென்னாபிரிக்க அணி.

பின்னர் 287 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கித் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆடிய இந்திய அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக அமைந்தது.

விஜய் (9), லோகேஷ் ராகுல் (4), அணித்தலைவர் விராட் கோஹலி (5) ஆகியோர் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். நான்காம் நாளான நேற்றுமுன்தினம் ஆட்ட நேரம் முடிவில் இந்திய அணி 2ஆவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 35 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

பின்னர் நேற்று 5ஆம் நாள் ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்தில், புஜாரா (17), பார்த்தீவ் படேல் (19) ஆகியோர் வெளியேறினார். தோல்வியைத் தவிர்க்கப் போராடிய ரோகித் சர்மா 47 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பின் வரிசை வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழக்க இந்திய அணி 50.2 ஓவர்களில் 151 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தது. இதன்மூலம் 135 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்க அணி வென்றது. தென்னாபிரிக்க அணி சார்பாக் அதிகபட்சமாக நிகிடி 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

இந்த வெற்றியின் மூலம், தென்னாபிரிக்க அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் தனதாக்கிக்கொண்டது.

இரு அணிகளுக்கு இடையேயான 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ஐ)

# பரபரப்பான ஆட்டத்தில் சிம்பாப்வே வெற்றி!



டாக்கா, ஜன. 18

இலங்கைக்கு எதிரான ஒருநாள் போட்டியில் சிம்பாப்வே அணி கடைசிக் கட்டப் பரபரப்புக்கு மத்தியில் வெற்றிபெற்றது.

பங்களாதேஷில் இலங்கை, பங்களாதேஷ் மற்றும் சிம்பாப்வே அணிகளுக்கிடையில் முத்தரப்புத் தொடர் நடைபெற்றுவருகிறது.

நேற்று நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் இலங்கை - சிம்பாப்வே அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி, ஆரம்பத்தை சிறப்பாக அமைத்துக் கொண்டது. அந்த அணி 75 ஓட்டங்களைச் சேர்த்தபோதே முதலாவது விக்கெட்டைப் பறிகொடுத்தது. ஆரம்ப வீரரான மியர் 34 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டமிழக்க, அடுத்து வந்த எர்வின் (2) வந்த வேகத்திலேயே சென்றார். மறுமுனையில் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த மசகட்ஸா 73 ஓட்டங்களைக் குவித்துச் சென்றார். அவரைத் தொடர்ந்து ரையலர் 38 ஓட்டங்களுடன் சென்றார். அப்போது அந்த அணி, 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 169 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. வல்லர் (29), மூர் (19) ஆகியோரும் தம்மாலான ஓட்டங்களைச் சேர்த்துச் செல்ல, 50 ஓவர்கள் முடிவில் சிம்பாப்வே அணி, 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 290 ஓட்டங்களைச் சேர்த்தது.

சிகண்டர் ராசா 81 ஓட்டங்களுடனும், கிரேமர் ஓட்டமெதுவும் பெறாமலும் ஆட்டமிழக்காது களத்தில் நின்றனர்.

இலங்கை அணி சார்பாக பந்துவீச்சில், குணரத்ன 3 விக்கெட்டுகளையும், திசார பெரேரா 2 விக்கெட்டுகளையும், லக்மல் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பின்னர் 291 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்குடன் களமிறங்கிய இலங்கை அணி, 46 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில், தரங்கவை (11) பறிகொடுத்தது. அந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்குள் குசல் மெண்டிஸூம் (0) வெளியேறினார். ஒரு முனையில் விக்கெட்டுகள் சரிந்தாலும் மறுமுனையில் சிறப்பாக ஆடிய குசல் பெரேரா 80 ஓட்டங்களுடன் வெளியேறினார். அப்போது இலங்கை அணி 132 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

பின்னர் வந்த வீரர்களில் மத்யூஸ் (42), சண்டிமால் (34), திசார பெரேரா (64) ஆகியோர் சிறப்பாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்திருந்தபோதும், பினனர் வந்த வீரர்கள் சோபிக்கத் தவறியமையால் கடைசிக்கட்டத்தில் இலங்கை அணி திண்டாடி 48.1 ஓவர்களில் 278 ஓட்டங்களை மாத்திரமே சேர்த்தது.

இதனால், சிம்பாப்வே அணி, 12 ஓட்டங்களால் வெற்றியைத் தனதாக்கிக்கொண்டது.

சிம்பாப்வே அணி சார்பாக பந்துவீச்சில், சாடரா 4 விக்கெட்டுகளையும், ஜர்விஸ், கிரேமர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், சிகண்டர் ராசா மற்றும் முசரபனி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக சிகண்டர் ராசா தெரிவு செய்யப்பட்டார். (ஐ)

ஊடகவியலாளராக
ஆசையா?



தகுதிகள்:
- தமிழில் ஓரளவு தேர்ச்சி
- ஊடகத்துறையில் ஆர்வம்
- முன்னனுபவம் இருப்பின் விரும்பத்தக்கது
- இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

தகுதிக்கேற்ப கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

ethirolimedia@gmail.com
021 224 38 18
021 300 48 48

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 18.01.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.